IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# உஷாதீபனின் 'நினைவுத் தடங்கள்' - சிறுகதைகளில் மனிதநேயம்

ந. கிருஷ்ணவேணி
(பதிவு எண்: P4367)
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.

## முன்னுரை

மனிதனை மனிதன் மதித்தலும், மனித மதிப்பைப் பேணுதலுமே மனிதநேயம். மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமானால் முதலில் மனிதன் தன்னைப் போன்றே மற்ற மனிதர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும். அன்பே இன்பத்தின் ஊற்றாகும். அவ்வின்ப ஊற்றே மனித இனத்தில் படிந்துள்ள மாசுகளை நீக்கும். மனிதனை மனிதனாக வாழ வைக்கும். உஷாதீபனின் நினைவுத் தடங்கள் சிறுகதைகளில் உணர்த்தப்பெறும் மனிதநேய சிந்தனைகளை இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது.

## மனிதநேயம் குறித்த கருத்துக்கள்

மனிதனானவன் ஆறறிவு பெற்ற மகத்துவத்தினை உணர வைப்பது என்பது மனிதநேய வெளிப்பாட்டில்தான் உள்ளது என்பதைத் தொல்காப்பியர்,

***"ஆறறி வதுவே அவற்றோடு மனனே"1***

என்று மனதால் உணரக்கூடிய அறிவினையே ஆறாவது அறிவாகக் குறிப்பிடுகின்றார். ஆறாம் அறிவு என்பது பகுத்தறிவினைக் குறிக்கும். அத்தகைய பகுத்தறிவைக் கொண்டு திகழ்வதே மனித இனம். மனிதன் என்னும் சொல் முதன் முதலாக பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான 'இனியவை நாற்பதில்' இடம்பெற்றுள்ளது.

***"நில்லாத காட்சி நிலையில் மனிதரைப்***

***புல்லா விடுதல் இனிது"2***

என்கிறது அந்நூல்.

மனிநேயம் பற்றிய விளக்கத்தில் தமிழ் ஆக்ஸ்போர் அகராதி, "ஒரே பகுப்பாகக் கருதப்படும் உலக மக்கள் அனைவருமான தொகுதி, இரக்கமும் ஒத்துணிவும் ஆகிய மனிதப் பண்புகள், மனிதத் தன்மை"3 என்று பொருள் விளக்கம் தருகிறது. செந்தமிழ் அகராதி, "அன்பு, நேசம், பகதி, உறவு"4 என்று பொருள் விளக்கம் தருகிறது. ர்ரஅயnவைல என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக மனிதப்பண்பு, மனித இயல்பு, மனிதத்தன்மை, அருளிரக்கம், அன்பு, அறச்செய்கை, சீவகாருண்யம் போன்ற பொருள்கள் அமைவதாக அகராதிகள் சுட்டுகின்றன.

மனிதம் நேயம் ஸ்ரீ மனிதநேயம். சக மனிதர்களிடம் அன்பு காட்டுவது மனிதநேயம். மனிதர்கள் மட்டுமன்றி எவ்வுயிர்களையும் தம் உயிர் போல் நேசிப்பது மனிதநேயமாகும்.

“வாடிய பயிரினைக் கண்டபோதெல்லாம் வாடினேன்”5 என்ற வள்ளலாரின் மனிதநேயம் போற்றுதலுக்கு உரியது. ”;மனித சக மனிதனிடம் மட்டுமல்லாது ஐந்தறிவு படைத்த விலங்கிடத்தும் பிற உயிர்களிடத்தும் தனது நேய உணர்வினை வெளிப்படுத்துவதும் மனிதநேயம்”6 என்று தி. கணேஷ் கூறுகிறார்.

**சிறுவனின் மனிதநேயம்**

‘ஊற்றுக்கண்’ என்ற சிறுகதையில் தினேஷ் என்ற சிறுவன் மனிதநேயத்தோடு செயல்படுகிறான். தினேஷ் தன் தந்தையுடன் தீபாவளிக்கு முதல் நாள் கடைவீதிக்குச் செல்கிறான். தன் அப்பாவிடம் இரவு முழுவதும் கடைகள் திறந்திருக்குமா? என்று கேட்கிறான். போனால் கிடைக்காதவர்கள், இரவியல் வந்து தான் துணி எடுப்பார்கள் என்கிறார் அப்பா. கடன் வாங்கியாவது புதுத்துணி போடனுமா? என்றான் தினேஷ். மனித வாழ்க்கை சந்தோஷம், துன்பம், சோகம் நிறைந்தது. வாழ்க்கை சலிச்சுப் போயிடக்கூடாது. அதுக்காகத்தான் தீபாவளி, பொங்கல், புத்தாண்டு என சொல்லப்பட்டாலும் வாழ்க்கையோட உண்மையான தாத்பரியமா இதைத்தான் நாம் எடுத்துரைக்கணும் என்றார் அப்பா.

அன்றைய தினசரியின் முதல் பக்கத்தில் தினேஷின் பார்வை இருந்தது. ஆந்திராவில் ஆற்றில் ரயில் விழுந்திருச்சு. காஷ்மீரில் அழிவு, சொந்தக்காரர்களை இழந்த சோகமும். துக்கமும் இருக்கிறது. இந்நேரத்தில் தீபாவளியை எப்படிப்பா சந்தோஷமாக கொண்டாட முடியும் என்று கேட்டான் தினேஷ். மறுநாள் அவன் விருப்பப்படி தீபாவளியை எதிர்நோக்கட்டும் என்று முடிவு செய்தார் அப்பா. இதை, “கொஞ்ச நாளைக்கு முன்னால் பூகம்பம் வந்தது... காஷ்மீரில... எக்கச்சக்கமான அழிவு... எங்கே பார்த்தாலும் இத்தனை சோகமம், துக்கமும் இருக்கிறப்போ அதையெல்லாம் எதையுமே நினைக்காம, ஒதுக்கித் தள்ளிவிட்டு நாம மட்டும் எப்படியப்பா சந்தோஷமா தீபாவளியைக் கொண்டாட முடியும்?”7 என்ற வரிகளில் முன்பின் தெரியாத, முடிமறியாத எங்கோவுள்ள ஒருவருக்காக வருத்தமும், வேதனையும் படும் சிறுவனின் மனிதநேயத்தை வெளிப்படுத்துகின்றார். மற்றவாக்ள் துன்பத்தில் இருக்கின்றபோது, தனக்கு மட்டும் இன்பம் வேண்டாம் என்று தீபாவளியைக் கொண்டாடாமல் இருக்கிறான் தினேஷ்.

**நண்பனுக்கு உணவு கொடுக்கும் மனிதநேயம்**

‘தாக்கம்’ என்ற சிறுகதையில் வெங்கடேஷ் என்பவன் தன் நண்பன் ராகவேலுவுக்குத் தன்னுடைய உணவைக் கொடுத்து உதவுகிறான். ராஜவேலுவுக்கு அம்மா கிடையாது. சித்திதான் உண்டு. இவன் யாரிடமும் அதிகமாக பேச மாட்டான். பள்ளியில் தூங்குவான். அவனைக் கிள்ளி எழுப்பி விடுவான் வெங்கஷே;. சாப்பிட்டியா எனக் கேட்டு தன் உணவைக் கொடுப்பான். இதனை, “காலை சாப்டியா இல்லை? என்று கேட்டு ரீசிஸ் பீரிடில் என் சாப்பாட்டை கொடுப்பேன் என்ற வரிகளில் எடுத்துரைக்கின்றார். தன் வகுப்பு மாணவனுக்குத் தன்னுடைய சாப்பாட்டைக் கொடுத்து உதவும் செயல் மூலம் வெங்கடேஷனின் மனிதநேயம் புலப்படுகின்றது.

**கணவன் மனைவி மீது காட்டும் மனிதநேயம்**

இன்றைய காலகட்டத்தில் கணவன்-மனைவி என்று இருவருமே வேலைக்குச் செல்கின்றனர். பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேலைக்குச் செல்கின்றனர். உடல் அசதி என்றர்ல் கூட மனைவியே வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும் என்ற மனநிலை கொண்ட கணவன்களுக்கு மத்தியில் விமலாவின் கணவர் மனிதநேயத்தோடு நடந்துகொள்கிறான்.

'புழுக்கம்' என்ற சிறுகதையில் கணவன் மனைவிக்குத் துணையாக வேலைக்குச் செல்கின்றனர். கணவன் மனைவிக்குத் துணையாக இருக்கிறான். ஆனால் வேலைக்குச் சென்று விட்டு வரும் பெண் தன் ஆசைக்கு உடன்பட வேண்டும் என நிலைக்கும் கணவன்களுக்கு நடுவில் இவர் அதிலிருந்து விடுபட்டவராக இருப்பதை, "காலையிலிருந்து தொடர்ச்சியாய் மாலை நாலு மணி வரை வீட்டுக் கடமைகளை நிறைவேற்றிவிட்டு, பிறகு ட்யூட்டிக்குக் கிளம்பி இரவு 12 மணி வரை வேலை பார்த்து மீளுகையில் அதற்கு மேல் ஒரு பெண்ணை தன் இச்சைக்கு என்று இழுத்துத் தொந்தரவு செய்வது எந்த விதத்தில் மனிதத் தன்மையில் சேர்த்தி என்று தோன்றியது இவனுக்கு தப்பித் தவறிக்கூட தான் அந்த மாதிரியெல்லாம் ஒருநாள் கூட இருந்ததில்லை என்பதை நினைத்தபோது பெருமிதம் ஏற்பட்டது"9 என்ற வரிகளில் எடுத்துரைக்கின்றார். கணவன்-மனைவி உறவில் அன்பு ஒன்றுதான் பிரதானமாக இருக்க வேண்டும். அவளை உடல் அளவில் கூடத் தொந்தரவு செய்யக்கூடாது என்ற உயர்ந்த மனிதநேயத்தைப் புலப்படுத்துகின்றார்.

**நாயின் மீது மனிதநேயம்**

'நேசம்' என்ற சிறுகதையில் 'சுந்தர்' என்பவர் சீனு என்ற நாயை வளர்த்தான். அதற்குத் தினமும் டீயும், வடையும் போடுவான். அது வாலை ஆட்டி தன் அன்பைத் தெரிவிக்கும். இந்நிலையில் சீனுவைக் காணாமல் சீனு என்று கூப்பிட்டுக் கொண்டே போனான் சுந்தர். மோட்டார் ரூம் இருக்கும் இடத்தை நோக்கி ஓடினான் வாட்ச்மேன் பாண்டி. காலைச் சுற்றியிருந்த பாம்பை கவ்விப் பிடித்த நிலையில் சீ இறந்து கிடந்தது. நமக்குப் பதிலா அது பலியாயிருச்சி... என்றனர். அப்போது இவன் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் இறங்கியது கீழே அதை அவர்கள் பார்த்திருக்க நியாயமில்லை. இதை, "அதற்குப் போடாமல் ஒரு நாளும் இவன் தனியே தின்றதில்லை ....தினமும் தனியாக இன்னொரு வடை வாங்க ஆரம்பித்தான். அதற்குப் போட இவன் தின்ன என்று மாறி மாறி ஒரு பத்து நிமிடம் அப்படிக் கழியும்"10 என்ற வரிகளில் சுந்தரின் மனிதநேய உணர்வு வெளிப்படுகிறது. சக மனிதர்களுக்குச் செலவு செய்ய யோசிக்கும் காலகட்டத்தலி;, ஒரு நாய்க்குப் பணம் செலவு செய்து டீயும், வடையும் வாங்கி, அதை பாசத்தோடு கொடுக்கும் மனிதநேயத்தை வெளிப்படுத்துகின்றார்.

**அப்பாவின் மனிதநேயம்**

'அப்பாவின் மனசு' என்ற சிறுகதையில் அப்பாவின் மனிதநேய உணர்வினை மகன் கூறுவதாக எடுத்துரைக்கின்றார். 'சுனாமி'க்கு ஒரு நாள் சம்பளத்தைக் கொடுத்தபோது அப்பாவின் ஞாபகம்தான் வந்தது. 15000 சம்பளம் வாங்கும் மகன் ஒருநாள் சம்பளமாக 500ரூபாய் சம்பளம் வாங்கிய அப்பா மனிதநேயத்தோடு இருந்தார் என்பதுதான் பெரிது.

ஊர் முழுவதும் மழை வெள்ளம். வெள்ளம் ஊருக்குள் புகுந்து விட்டது. நிறைய உயிர் சேதம், பொருட்சேதம். இரண்டு நாட்களுக்கான ணவுப் பொட்டலங்களை அப்பா தயாரித்தார். மூன்றாம் நாள் வீட்டுக்கு வந்தார். விடிய விடிய வேலலை பார்த்திருங்கேளே? அதுக்கு என்ன பேசினேன்? என்றாள் அம்மா. அதற்கு பணம் வேண்டாம் என்று கூறிவிட்டதாகக் கூறினார் அப்பா. இரண்டு நாட்கள் கூலி ஆயிரத்திற்கு மேலே வரும். மக்கள் எல்லாம் துணி, வீடு இல்லாம தவிக்குது. நாம் அவாளுக்காக இதை செய்தால் என்ன? எனக் கேட்டார் அப்பா. இதை, "அதுக்கு ஒண்ணும் வேண்டாம்-னுட்டேன்' கொடுத்தத வாங்கிக்கப்படாதோ? தயங்கித் தயங்கி அம்மா கேட்டாள். ஏட்டீ... ஜனங்கள் அங்கே சோறு தண்ணி, துணிமணி, வீடு இல்லாம ரோட்டுல கிடந்து தவிக்கிறது! எஙள்கே பார்த்தாலும் ஒரே ஓலமா, பரிதவிப்பாக் கிடக்கு... அவாளுக்காக நான் இதைச் செய்யப்படாதா?"11 என்ற வரிகளில் மற்றவர்கள் கஷ்டத்தில் இருக்கும்போது நமக்கு அந்தப்பணம் வேண்டாம். அது அவர்களுக்கே உதவட்டும் என்று நினைக்கும் மனிதநேயத்தைச் சுட்டிக்காட்டுகிறார்.

பணம் இருக்கும் நிலையில் பிறருக்கு உதவுவது பெரிதான விஷயம் இல்லை. தன்னிடம் அதிகமான அதிகமான வருமானம் இல்லாதபோது, ஒரு சாதாரண சமையல்காரராக இருந்தும் பணம் வேண்டாம் என்று கூறியது அவரின் மனிதநேயத்திற்குச் சான்றாக உள்ளது.

**முடிவுரை**

மனிதனை மனிதனாக நடத்த வேண்டும். மனிதனுக்கு மனிதன் உதவ வேண்டும். ஐந்தறிவு படைத்த மிருகத்திடமும் கூட மனிதநேயம் காட்ட வேண்டும் என்று உஷாதீபன் வலியுறுத்துவதை அறிய முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. புலியூர்க்கேசி (உ.ஆ.), தொல்காப்பியம்,
பாரி நிலையம்,
184, பிராட்வே, சென்னை.
12வது பதிப்பு: 2003

2. இராஜகோபாலப்பிள்ளை, கோ., இன்னா நாற்பது, இனியவை நாற்பது,
நீதி வெண்பா (தொகுப்பு),
ஸ்ரீ செண்பகா பதிப்பகம்,
சென்னை.
3வது பதிப்பு: 2010

3. Murugan, V., Oxford English – English – Tamil Dictionary,
Oxford University,
14th Impression 2013

4. லாசரஸ், ஜி.பி., செந்தமிழ் அகராதி,
உலக இலக்கியக் கழகம்,
தியாகராய நகர், சென்னை.
1997

5. துரைச்சாமிப்பிள்ளை, ஔவை, அ., திருவருட்பா – எட்டாம் தொகுதி,
வர்த்தமானன் பதிப்பகம்,
சென்னை.
மறுபதிப்பு: 2010

6. செல்வராஜ், பா., தமிழலக்கியத்தில் மனிதநேயம்,
ஆதித்தனார் கல்லூரி,
திருச்செந்தூர்.
2007